தனலக்ஷ்மி பிலிம்ஸ்
அளிக்கும்...
பத்மா
பிலிம்ஸ்...
வளர் பிறை
டைரக்ஷன்
D.யோகானந்த்

கதைச் சுருக்கம்

தர்மலிங்கம் பிள்ளை கிருஷ்ணுபுரத்தில் பெரிய மிராசுதார். அவர் தந்தை இறந்து போகும்போது முப்பதுவேலி நிலமும் மூன்று தோப்பும், மூன்று வாக்கியங்களையும் தர்மலிங்கத்துக்குக் குடும்பச் சொத்தாக வைத்துவிட்டு இறந்தார். ஆனல் தர்ம லிங்கத்தின் குடும்பத்தார் மூன்று வாக்கியங்களாகிய "எண்ணும் எழுத்தும் கண்ணெனத்தகும், ஒன்று பட்டா லுண்டு வாழ்வு, தீயாரைக் காண்பதுவும் தீதே" என்பதை மறந்து விட்டனர். அதனல் விளைந்த இன்னல்கள் பல.

தர்மலிங்கத்திற்கு கனகு என்ற மகனும், சுந்தரி என்ற மகளும், நல்லம்மை என்ற நல்ல மனைவியும் வாய்த்திருந்தனர். வைசூரி காரணமாக சிறுவயதில் பார்வையற்றிருந்த கனகுவால் படிக்க முடியவில்லை. பார்வை திரும்பியபின் கனகு படிக்க இஷ்டப்படவில்லை. அதனல் அவன் எண்ணையும், எழுத்தை யும் மறந்து வளர்ந்து விட்டான்.

ஜோஸியத்தில் அதிக நம்பிக்கைகொண்ட தர்மலிங்கம் ஒருநாள் ஜோஸியரை சந்தித்துவிட்டுத் திரும்பும்போது ரயிலில் மணிப்பர்ஸை நழுவ விடுகிறர். பிக்பாக்கெட் மணியின் கையில் அப் பர்ஸ் சிக்குகிறது. அந்தப் பர்ஸ் பணத்தை எடுத்துக் கொண்டு, அந்தப் பணத்திலேயே, நல்லவன் போல தருமலிங் கத்திற்கு உதவி செய்து அவரது நண்பனுகிறன்.

கல்யாணமாகாத தர்மலிங்கத்தின் மகளைக் கண்டு மயங்கு கிறன் மணி. அவளையும், சொத்தையும் அடைய திட்டமிடு கிறன். அவனது திட்டத்திற்கு கனகு குறுக்கே நிற்பது கண்டு தர்மலிங்கத்தின் மனதில் விஷவிதை ஊன்ற ஜோஸியருக்கு லஞ்சம் கொடுக்கிறன். சூழ்நிலை மணிக்கு உதவுகிறது.

கனகு காட்டூரிலிருந்து அனதைப்பெண் சிவகாமியையும் அவளது வளர்ப்புத் தந்தையையும் கிருஷ்ணுபுரத்துக்குக் கூட்டி வருகிறன். இது தர்மலிங்கத்துக்குப் பிடிக்கவில்லை. சிவகாமி யின் வளர்ப்புத் தந்தை இறந்தபின் நிராதரவான சிவகாமியை நல்லம்மை தன் வீட்டிற்கே அழைத்து வருகிருள். இது தர்ம லிங்கத்திற்கு முற்றிலும் பிடிக்கவில்லை. கனகுவைத் தான்

மணக்க முடியாது என்று தெரிந்ததும் சிவகாமி தற்கொலை செய்துகொள்ள முயலுகிறாள். கனகு இதைத் தடுக்கிறான்; முடியவில்லை. அவனும் அவளோடு சாகத்துணிகிறான். நல்லம்மை குறுக்கிட்டு அவர்கள் இருவருக்கும் திருமணம் செய்விக்கிறாள். இந்த விஷயம் அறிந்த தர்மலிங்கம் ஆத்திரமடைந்து கனகுவை அடிக்கிறார். ஊர் உண்மையை அறியுமுன் தன் மகள் சுந்தரிக்குத் திருமணம் செய்ய ஏற்பாடு செய்கிறார்.

பிள்ளை வீட்டார் பெண் பார்க்க வரும்பொழுது சிவகாமியைப் பற்றி விசாரிக்கவும், தர்மலிங்கம் அவளை வேலைக்காரி என்று கூறுகிறார். கனகு அவள் தன் மனைவி என்று கூறுகிறான். இந்த குழப்பத்தைக் கண்ட பிள்ளைவிட்டார் சம்பந்தமே வேண்டாமென்று போகின்றனர். கோபமடைந்த தர்மலிங்கம் 'ஒன்று பட்டாலுண்டு வாழ்வு' என்ற வாக்கியத்தை மறந்து கனகுவை ஆத்திரம் தீர அடிக்கிறார். சிவகாமி தன்னால் குடும்பமே சீர்குலைவது கண்டு வீட்டைவிட்டு வெளியேறுகிறாள்.

மனம் நொந்து போன கனகு அன்றிரவு காவல் குடிசையில் தூங்குகிறான். பிக்பாக்கெட் மணி தர்மலிங்கத்தின் நெல் விற்ற பணம் குடிசையிலிருந்து எரிந்து விட்டது என்று கதை கட்டி பணத்தைத் திருட நினைக்கிறான். அதற்காக குடிசைக்குத் தீ வைக்கிறான். குடிசையின் உள்ளே படுத்திருந்த கனகு வெளியே வரமுடியாமல் தவிக்கிறான். மயங்கி விழுகிறான். தீ விபத்தின் அதிர்ச்சியில், கனகு ஊமையாகிறான். நல்லம்மை மகனுக்கு நேர்ந்த நிலை கண்டு இறக்கிறாள்.

- **வாயிழந்த கனகு மீண்டும் பேசினானா?**
- **வீட்டை விட்டு வெளியேறிய சிவகாமி என்ன ஆனாள்?**
- **மணியின் சூழ்ச்சி வென்றதா?**
- **தர்மலிங்கம் தந்தையின் மும்மொழியின் உண்மையை உணர்ந்தாரா?**

என்பதை வெண்திரையில் காண்க!

இயற்றியவர் :
கவிஞர் கண்ணதாசன் :

பாடியவர் :
பி. சுசீலா

மௌனம் மௌனம் மௌனத்திலே
வணங்குகிறேனய்யா (மௌனம்)—என்
மனதினில் ஓடும் நதியினில் மூழ்கி
மயங்குகிறேனய்யா (மௌனம்)

உறக்கத்திலும் உனைப் பார்த்திருக்கும்—என்
உறவினைச் சொல்வேனு —நான்
ஒவ்வொரு நாளும் உன்னுடன் வாழும் (ஒவ்வொரு)
உரிமையைச் சொல்வேனு (மௌனம்)

பிறக்கும் குழந்தையும் உன் வடிவாக
பிறந்திட வேண்டுமையா—அவன்
சிரிக்கும் பொழுதும் உன் முகம் போலே (சிரிக்கும்)
சிரித்திட வேண்டுமையா (மௌனம்)

இருக்கும் வரைக்கும் உன்னருகே நான்
இருந்திட வேண்டுமையா—உயிர்
பறக்கும் பொழுதும் உன் மடிமேலே (பறக்கும்)
பறந்திட வேண்டுமையா (மௌனம்)

—6—

இயற்றியவர் :
கவிஞர் கண்ணதாசன்

பாடியவர் :
பி. சுசீலா

நான்கு சுவர்களுக்குள் எது நடந்தாலும்
நமக்குள் இருக்கட்டும் நல்லம்மா (நான்கு)—இந்த
வீட்டைத்தாண்டி நாம் வேறு இடம் தேடி
ஓட முடியுமா சொல்லம்மா (ஓட)—நான்கு

சொத்து சுகம் கொண்டு அத்தை மகன் என்று
சொந்தமாக நான் வரவில்லை (சொத்து)—என்
தூய மனமன்றி வேறு பொருள் ஏதும்
சீதனம் கொண்டு தரவில்லை (நான்கு)

எட்டி உதைத்தாலும் கட்டி அணைத்தாலும்
எனக்கு அவரன்றி யாரம்மா (எட்டி)—எனக்கு
இந்த இடம் அன்றி சொந்த இடம் வேறு
இந்த உலகினில் ஏதம்மா

கணவன் திருக்கோயில் கடமை புரிகின்ற
பணிப்பெண் முகம் பார்க்கச் சொல்லம்மா
பழைய முகம் என்று வெறுப்பதனுல் உன்
புதிய முகம் காட்டு நல்லம்மா—இது (பழைய)—(நான்கு)

இற்றியவர் :
கவிஞர் கண்ணதாசன்

பாடியவர் :
பி. சுசீலா

பச்சைக் கொடியில் மழை விழுந்தது
மலர்கள் உண்டாச்சு—அது
பாய்ந்து செல்லும் பாதையெல்லாம்
பயிர்கள் உண்டாச்சு—என்

இச்சைக் கொடிக்கு கண்திறந்தது
அறிவு உண்டாச்சு—அது
எழுதப் படிக்கத் தெரிந்து கொண்டது
அமைதி உண்டாச்சு

தலைதழுவும் தென்றலிலே
ஸ்வரங்கள் உண்டாச்சு—இங்கே
தாவிவரும் அருவியிலே
ராகம் உண்டாச்சு

சொட்டு சொட்டாய் நீர் விழுந்து
தாளம் உண்டாச்சு—அதைத்
தொடுத்து வைத்தார் தமிழிலே
கீதம் உண்டாச்சு

காட்டுக் குயில் பாட்டுப்பாட
குரல் கொடுத்தவர் யார்—இங்கே
கானமயில் நடனமாடக்
கற்றுத் தந்தவர் யார்

நாட்டு வாழைக் கனிகளிலே
சுவை கொடுத்தவர் யார்—அந்த
நல்லவரே எங்களுக்கும்
கண் கொடுத்து விட்டார்.

பத்மா
பிலிம்ஸ்
வளர் பிறை
டைரக்ஷன்
D. யோகானந்த்